

01.11.2026 செய்திகள்

வந்தே பாரத் ஸ்லீப்பர் ரயில் சேவை தொடக்கம்

- இந்திய ரயில்வேயின் அதிநவீன பயணப் புரட்சியாகக் கருதப்படும் 'வந்தே பாரத்' ரயில்களில், இரவு நேர பயணங்களுக்காக படுக்கை வசதி (ஸ்லீப்பர்) கொண்ட புதிய ரயில்கள் அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றன.
- அந்த வகையில் இந்த ரயிலின் முதல் சேவை மேற்கு வங்கத்தின் ஹவுரா-அசாமின் காமாக்யா இடையே கடந்த ஜன.17-ம் தேதி தொடங்கியது.
- அதன் தொடர்ச்சியாக ஆன்மிக நகரான காசியை (வாரணாசி) தலைநகர் டெல்லியுடன் இணைக்கும் 2-வது 'வந்தே பாரத் ஸ்லீப்பர்' ரயில் சேவை நேற்று தொடங்கப்பட்டது.

என்விஎஸ் - 03 செயற்கைக்கோள்

- அமெரிக்காவுக்கு 'ஜிபிஎஸ்' போல, நம்நாட்டில் தரை, கடல் மற்றும் வான்வழி போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு பயன்பாட்டுக்கு உதவும் இந்திய மண்டல வழியாட்டுதல் செயற்கைக் கோள் அமைப்பு (ஐஆர் என்எஸ்எஸ்) உருவாக்க இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) முடிவு செய்தது.
- இஸ்ரோ சார்பில் வடிவமைக்கப்பட்ட என்விஎஸ்-03 (ஐஆர்என்எஸ்எஸ் 1 எல்) செயற்கைக்கோள் ஜிஎஸ்எல்வி எப்-18 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து வெற்றிகரமாக செலுத்தப்பட்டது.
- நேவிக் தொழில்நுட்பம் மூலம் இருப்பிடம், வழிகாட்டுதல் மற்றும் நேரச் சேவைகளை வழங்க சுற்றுப்பாதையில் குறைந்தது 4 செயற்கைக் கோள்கள் தேவை.
- எனவே, இந்த ஏவுதலின் மூலம் நமது நேவிக் சேவைகளை முழுமையாக மீட்டெடுத்துள்ளோம்.
- இதன் மூலம் 10,400-க்கும் மேற்பட்ட ரயில் இன்ஜின்கள், 64,000 மீன்பிடிப் படகுகள் நேரலையில் கண்காணிக்கப்படுகின்றன.
- வாகனங்களைக் கண்காணிக்க இதுவரை 50 லட்சத்துக்கும் மேற்பட்ட கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.